# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 23 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 23


## நீங்கள் யார்?

(இந்த பகுதியானது அப்போ 19 : 10-20 லிருந்து கொடுக்கப்பட்டுள்ளது).

எபேசு பட்டணத்திலே, இயேசுகிறிஸ்துவின் சீஷனான, அப்போஸ்தலனாகிய பவுல், இரண்டு வருடங்களாக கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டு வந்தார். அவர் பரிசுத்தஆவியைக் குறித்தும் பிரசங்கித்து வந்தார்.ஆசியா கண்டமெங்குமிருந்த, கிரேக்கர், யூதர்களாகிய ஜனங்களுக்கு மாத்திரமல்ல, மற்ற எல்லா பாஷைக்காரராகிய ஜனங்களுக்கும் தேவனுடைய நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களை செய்தருளினார். குணமாக்கும் வல்லமையினாலே அநேகர் விடுதலையடைந்தார்கள்.பவுலினுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின.

தேசாந்தரியாய்த் திரிகிற யூதர்களில் சிலர் பொல்லாத ஆவிகளை துரத்துவதற்கு தங்களுடைய மந்திரங்களையும், மாயவித்தைகளையும் உபயோகப்படுத்தி வந்தார்கள்.அவர்கள் பவுல் இயேசுவின்பேரில் பிசாசை துரத்துகிறதைக் கேள்விப்பட்டு தாங்களும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து, பவுல் பிரசங்கிக்கிறதை இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்.பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள்.பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, அவர்களை காயப்படுத்தியது. அப்படியானால் அந்த பொல்லாத ஆவி என்ன சொன்னது தெரியுமா அதாவது தெய்வீக குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய வல்லமையையும், அவருடைய ஊழியக்காரனாகிய பவுலையும் அறிவேன். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பெயராலே என்னை அதிகாரம் செலுத்த உங்களுக்கு என்ன வந்தது? என்று கேட்டுக்கொண்டே அந்த ஏழுபேர் மேல் பாய்ந்து, அவர்களை காயப்படுத்தியது. அவர்கள் அந்த வீட்டைவிட்டு ஓடிப்போனார்கள்.

இது எபேசுவிலே குடியிருந்த யூதர், கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்த அநேகர் தங்கள் விசுவாசத்தை கிரியைகளிலே வெளிப்படுத்தி, அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரருடைய அநேக பொல்லாத புஸ்தகங்கள் சுட்டெரிக்கப்பட்டது.

இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது. இந்த அற்புதமான நிகழ்வைப் படிக்கும்போது, தேவநாமம் மகிமைப்படும்படியான காரியங்கள் நடைபெறுவது உற்சாக மூட்டுவதாகவும், அர்ப்பணிப்புள்ள ஊழியத்தையும் காட்டுகிறது. அதேசமயம் தேவனுக்குப் பயப்படும் பயம், மெய்யான தேவனுடைய வல்லமை கிரியையில்



**அந்த மனுஷனுக்குள் இருந்த பொல்லாத ஆவி பின்வருமாறு கூறியது : இயேசுவையும் அறிவேன்; பவுலையும் அறிவேன்; நீங்கள் யார்?**


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி<br>சுய பரிசோதனை | ஒருநோக்கு செய்தி<br>சுய பரிசோதனை நன்மைகள் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா?<br>ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

வெளிப்பட வேண்டுமானால் நம் இருதயம் பரிசுத்தமாயிருக்க வேண்டும்.சாத்தான் இயேசுகிறிஸ்துவையும் அறிந்திருக்கிறான். அவருடைய உண்மையான ஊழியக்காரர்களையும் அறிந்திருக்கிறான்.அதேபோல மீட்கப்படாத ஜனங்களைக் கூட அவன் அறிந்து வைத்திருக்கிறான்.

ஏனெனில் ஜனங்களின் இருதயத்திலிருக்கிற இரகசியமான பாவ எண்ணங்களை அவன் அறிந்திருக்கிறான். அதேபோல ஸ்கேவாவின் ஏழு மகன்கள் போன்ற தவறான போதகர்களையும், அவர்களுடைய சிந்தனைகளிலும் சத்துரு கிரியை செய்கிறான்.



கிறிஸ்தவர்கள் என்று உங்களை நீங்கள் அழைத்துக் கொள்வீர்களாகில், உங்கள் வாழ்வில் பாவமற்றவராக வாழ்கிறீர்களா?

அந்த சத்துரு கேட்ட கேள்வியை நாம் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டுள்ளோம்.நீங்கள் யார்? உங்கள் குணாதிசயத்தின் உண்மை நிலை என்ன?

பல ஜனங்கள் தங்களுடைய குடும்பம், பெயர், மதம், சமயம் அவர்கள் சார்ந்துள்ள சபை, சமுதாயத்தில் அவர்களுடைய அந்தஸ்து. இவைகளைக்கொண்டு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆவிக்குரிய அடையாளத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உலகப்பிரகாரமான நம்முடைய இந்த அடையாளங்கள் பிரயோஜனமற்றது. ஆவிக்குரிய அடையாளம் என்பது ஆவிக்குரிய வளர்ச்சி நிலைகளோ அல்லது சபையில் வகிக்கும் பதவிகளையோ சார்ந்ததல்ல. இருதயத்தின் பரிசுத்தமும், நம் வாழ்வின் கிரியைகளையுமே சார்ந்தது.

நீங்கள் உண்மையான தேவனுடைய பிள்ளையா? தேவனுடைய பரிசுத்த ஆளுகைக்கு நம் அனுதின வாழ்வில் இடம் கொடுக்கிறோமா? கிறிஸ்தவன் என்று அழைக்கப்பட்டும், கிறிஸ்தவ சபை ஐக்கியத்தினரோடு பங்குபெற்றும் கூட, இன்னும் பாவியாகவே வாழ்கிறோமா? ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பரிசுத்தமாயும், வாரத்தின் மற்றநாட்களில் சாதாரண உலகமனிதர்களைப் போலவே வாழ்கிறீர்களோ? கிறிஸ்து இயேசுவுக்குள் மனமகிழ்ச்சியாய் இருக்கிறீர்களா? நீங்கள் நேர்மையாய் நடக்கிறீர்களா அல்லது பொய் பேசுகிறீர்களா?

நீங்கள் ஒரு அன்பான கணவனாகவோ அல்லது மனைவியாகவோ தோற்றத்தில் இருந்து கொண்டு தனிப்பட்ட வாழ்வில் அவர்களை அவமரியாதை செய்கிறீர்களா. ஒளியின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளாமல், மாம்ச இச்சைக்காக இருளின் வழியில் நடக்கிறீர்களா உண்மையான நம்முடைய அடையாளம் என்பது நாம் யாராக ஆக விரும்புகிறோம் என்பதில் இல்லை, நாம் யார் என்பதில்தான் இருக்கிறது.

ஒருநாளில், நாம் ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்புக்கென்று ஆவிக்குரிய உண்மையான அடையாளத்துக்கென்று தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும், ஆகவே ஒருவிசை நம்மை நாமே சோதித்தறிந்து “உண்மையாகவே ஆவிக்குரிய வாழ்வில்” நான் யார்? என்று உணர்ந்து கொள்ளக்கடவோம்.

**சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதேற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்**
**- யாக்கோபு 1 : 25**

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* ***www.thegospeltruth.org*** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.இதற்கான இரசீதும் உங்களுக்கு கொடுக்கப்படும்.*
*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.*

**டபிள்யு.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் – எபேசி 4 : 13

ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தாலே கழுவப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுவிட்டால், பின்பு தேவனுக்குள் தம்மை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளும் நிறைவைக் கண்டடைவார்கள். ஏனெனில் ஒருவரை பூரணபுருஷராக்கும் வரைக்கும், கர்த்தராகிய தேவன் நம்மைப் புடமிட்டு, சோதித்தறிந்து கர்த்தருக்குள் வளரச் செய்வார். தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, அனுதினமும் நம்மை கிறிஸ்துவைப் போல் எல்லா சூழ்நிலைகளிலும் பொறுமையாய் வாழ ஒப்புக்கொடுப்போம். ஒரு பெலவீனத்தையோ அல்லது தோல்வியையோ கண்டு ஒருபோதும் தேவனுடைய பரிசுத்தவான்கள் துவண்டு போய் விட கூடாது. அது போன்ற சூழ்நிலைகளில் தேவனுடைய வல்லமையினாலே நாம் ஜெயம் பெற முடியும் நியாயத்தீர்ப்புக்காக நம்மை வழிநடத்தும் பொருட்டு தேவனுடைய கிருபையும், அன்பும் நம்மை காக்கக்கடவது.

இந்த இதழில் நாம் அதிதீவிரமான ஒரு காரியமானதும், சில இயற்கையான அறிவுரையாகவும் சில காரியங்களைப் பார்க்க இருக்கிறோம். அதாவது நம்மை நாமே சோதித்து, ஆராய்ந்து, அறியும்படியாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அது கடினமான காரியமாயிருப்பினும்கூட, ஒளியின் பிள்ளைகளாய் மாறும் பொருட்டு நம்மை சோதித்தறிவது அவசியம். நம்மை சோதித்தறிவது அவசியமில்லை என எண்ணுவோமேயாகில், கர்த்தருக்குள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி குன்றியவர்களாகவே காணப்படுவோம். நம்மைவிட்டு அகற்ற வேண்டிய காரியங்களை செய்வதற்கு கர்த்தர் நமக்கு பெலன் அளிப்பார்.

பாவத்திலே வாழ்ந்து கொண்டு, கிறிஸ்துவின் பெயராலே பொய்யாய் வேஷமிடுகிற ஜனங்கள் இந்த உலகத்தில் உண்டு. மற்றவர்களைப் பகைத்து, குறை கூறிக்கொண்டு இருப்பதை விட்டுவிட்டு, தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நம்மை நாமே சரிசெய்து கொண்டால் எவ்வளவு நேர்த்தியாய் இருக்கும் பாவிகள் பாவத்தை உணரவேண்டும், ஆனால் இன்னும் தேவனுடைய வார்த்தைக்கு நேர்மாறாக செயல்பட்டுக் கொண்டு, தங்களைப் பொய்யராக்கிக் கொண்டு, வாழ்கிற ஜனங்களைக் குறித்த மிகுந்த பாரம் எனக்கு உண்டு. நாமும் அதற்கு விதிவிலக்கல்ல அநேக ஜனங்கள் தங்கள் சொந்த கருத்துக்களையும், விதிமுறைகளையும் வகுத்துக்கொண்டு, அவற்றிற்கு நடுவாக கர்த்தரை வைத்துப் பார்க்கிறார்கள் கர்த்தர் என்றென்றும் மாறாதவர் நாம்தான் அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அவருக்கேற்றப்படி வாழ்வோம். அப்போதுதான் உண்மையாய் அவரை சேவிக்கும் நமக்கு சமாதானமுண்டு. உண்மையான தேவபிள்ளைகளுக்கு மத்தியில் தேவவார்த்தையை அசட்டை செய்து வாழும் எத்தனையோ பேர் நம்மில் உண்டு.

தேவபிள்ளையாய் நடித்து வாழ்வது என்பது மிகவும் பரிதபிக்க கூடிய ஒரு நிலையிலே கொண்டு போய் சேர்த்துவிடும். ஆகவே நம்முடைய கோட்பாடுகளையும், நம்பிக்கையையும் ஆராய்ந்து பார்ப்பதோடு மாத்திரமல்ல, நம்முடைய பழக்கங்களையும், குணாதிசயங்களையும் சோதிக்கக்கடவோம், நம்மில் சிலர் சரியான கோட்பாடுகளை பின்பற்றுகிறவர்களாய் இருப்போம். ஆனால் நம்முடைய குணாதிசயங்களில் உண்மையிருக்காது, அப்படிப்பட்டவர்கள் எப்படி தேவனிடத்தில் அன்புகூர முடியும்? நம்முடைய இருதயத்தை தேவ ஆவியானவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம். தேவன் அபிஷேகித்த பாத்திரங்களாகிய ஊழியக்காரரைக் கொண்டு, கர்த்தர் சொல்லுகிற வார்த்தையை கேட்டு நடப்போம் நம் வாழ்வை சரிப்படுத்தி, கர்த்தரின் வழியில் நடப்போம் அவருடைய நிறைவான வளர்ச்சியின் பூரணத்தை அடையலாம்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

***www.thegospeltruth.org***

# வேதபாட வழிகாட்டி

## சுய பரிசோதனை



**வேத வாசிப்பு :** உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் உங்களை நீங்களே பரிட்சித்துப் பாருங்கள்- 2 கொரி 13 : 5

**விளக்கம் :** சுய பரிசோதனை என்பது நம்முடைய குணாதிசயங்கள், தகுதிகள், நடத்தை, எண்ணங்கள் இவையெல்லாவற்றிலும் தேவை

**சுருக்கம் :** மாம்சீகத்தின் கபடத்தை நீக்கிவிட்டு நம்மைநாமே சோதித்து ஆராய்ந்து மோட்சராஜ்யத்துக்குள் பிரவேசிப்போம்

**I.உங்களை நீங்களே சோதித்தறியுங்கள்**

A. 2 கொரி 13 : 5 நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்

B. 1 கொரி 11 : 27 – 31 நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்

C. சங் 77 : 6 என் ஆவி ஆராய்ச்சி செய்தது

**II.தற்பரிசோதனையின் முக்கியத்துவம்**

A. 1 கொரி 10 : 12 விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

B. ரோம 14 : 12 – 13 தேவனுக்குக் கணக்கொப்பான

C. நீதி 21 : 2 மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்

D. கலா 6 : 7-8 நித்திய ஜீவனை அறுப்பான்

E. 1 கொரி 6 : 9 -11 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

**III.சுய மாயத்தோற்றம்**

A. நீதீ 30 : 12 தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு

B. யாக்கோபு 1 : 22-25 திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாமலிருக்கிறான்

C. கலா 6 : 3 -4 தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்

D. மத் 7 : 1-5 உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு

**IV.சுய நியாயம்**

A. நீதி 20: 6-7 மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள்

B. லூக் 16 : 15 உங்களை நீதிமான்களாக காட்டுகிறீர்கள்

C. 2 கொரி 10 : 17-18 தன்னைத்தான் புகழுகிறவன்

D. மத் 3 :7-9 பாரம்பரியத்தை நம்பாதீர்கள்

**V.சுய - நீதி**

A. மத் 5 : 20 பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்

B. மத் 23 : 2-8 சொல்லியும், செய்யாதிருக்கிறார்கள்

C. மத் 23 : 23 – 29 மாயக்காரரே வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்களே

**VI.இரகசிய காரியங்கள்**

A. யோவான் 3 : 19-21 ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்

B. பிரசங்கி 12 : 13 -14 தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்

C. நீதி 28 : 13 தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்

**VII.உங்கள் செய்கையின் பலனாலே உங்களை சோதித்துப் பாருங்கள்**

A. நீதி 20 : 11 பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையில் விளங்கும்

B. மத் 7 : 13 -23 நல்லமரம் நல்ல கனி கொடுக்கும்

C. யோவான் 10 : 27 ஆடுகள் மேய்ப்பனுக்கு பின் செல்லுகிறது

D. தீத்து 2 : 7-8 நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பி

E. மத் 25 : 33 – 43 நீதிமான்களோ நித்திய ஜீவனை அடைவார்கள்

**VIII.முழுமையான பரிசோதனை**

A. யோவான் 21 : 15 இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்?

B. 1 கொரி 6 : 20 உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்

C. 2 நாளா 25 : 1-2 செம்மையும், முழு மனதும்

**IX.கர்த்தர் நம்மை சோதிக்கும்படி அனுமதியுங்கள்**

A. சங் 26 : 2 கர்த்தாவே என்னைச் சோதித்துப்பாரும்

B. சங் 139 : 23 -24 என் இருதயத்தை அறிந்து கொள்ளும்

**X.ஒப்புக்கொள்ளுங்கள்**

A. 2 சாமு 12 : 7 நீயே அந்த மனுஷன்

2 சாமு 12 : 13 நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன்

**XI.தேவனுக்கு முன்பாக சுத்தவான்களாய் விளங்குங்கள்**

A. 2 கொரி 7 :10-11 உங்களை சுத்தவான்களென்று விளங்கப் பண்ணினீர்கள்.

B. அப்போ 24 : 16 குற்றமற்ற மனசாட்சியை உடையவன்

C. 2 கொரி 7 : 1 பரிசுத்தமாகுதல்

D. 2 பேது 3: 18 இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்

**முடிவு :**

இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் – 2 பேதுரு 3 : 11.

# ஆவிக்குரிய நன்மையின்

# சுய - பரிசோதனை

இதோ நியாயத்தீர்ப்பு நாள் வருகிறதாய் இருக்கிறபடியால், வேதசத்தியத்துக்கு கீழ்ப்படிந்து நம்முடைய பழக்கவழக்கங்கள், நடத்தை, சிந்தை, இவையெல்லாவற்றிலும் தற்பரிசோதனை செய்து நம் வாழ்வை மாற்றிக்கொள்வதற்கான தருணம் இது. காலம் சமீபமாயிருக்கிறபடியால், தாமதிக்காதீர்கள்.



**தேவனுக்குப் பயந்து சுய பரிசோதனை செய்யாமல் வாழ்கிறவர்களின் நிலை மாயத் தோற்றம் நிறைந்தது. வேதவார்த்தையை கேட்பதோடு நின்றுவிடாமல் அதன்படி செய்கிறவர்களாயும் இருப்போம்.**

ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14 : 12). பூமியிலே நாம் வாழ்ந்த நாட்களில் நம்மைக் குறித்ததான கணக்கை, நியாயாசனத்துக்கு முன்பதாக கர்த்தருக்கு கணக்கொப்புவிக்க வேண்டும். நாம் எந்த சூழ்நிலையிலும் வாழ்ந்தோம் என்றோ, நம்மை மற்றவர்கள் எப்படி நடத்தினார்கள் என்றோ ஒருபோதும் நியாயத்தீர்ப்பிலே கேட்கப்படுவதில்லை. மாறாக நம் அனுதின வாழ்வில் நம் இருதயத்தின் பரிசுத்தமும், நம் ஒழுக்கங்களுமே நியாயத்தீர்க்கப்படும்

**உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்**

மற்றவர்களைக் குறித்தும், அவர்களுடைய குற்றங்களையும், பாவங்களையும் குறித்தும் எளிதாக நாம் குறைகூறி விடுவோம்.ஆனால் பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது : நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று, உங்களை நீங்களே சோதித்துப் அறியுங்கள் (2 கொரி 13 : 5).மற்றவர்களை அல்ல, உங்கள் சுயவாழ்வையும், விசுவாசத்தையும் சோதித்து உணருங்கள்.மேலும் தாவீது சொன்னதுபோல, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்; என் ஆவி ஆராய்ச்சி செய்தது (சங் 77 : 6).நீங்களும் கர்த்தரோடு உள்ள ஐக்கியத்தை ஆவியினாலே சோதித்துப் பாருங்கள்.நாம் மனுஷீகத் தன்மைகளைத் தரித்தவர்களான படியினால், தவறுகிறவர்களாயிருந்தாலும் ஆவிக்குரிய சுயபரிசோதனை மூலம் நம்மை சரிப்படுத்தி, நிலைநிறுத்திக் கொள்ளலாம். பல வருடங்களாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிற, அவருக்கு சேவை செய்கிற ஒருவர் இன்றும் கர்த்தருக்கேற்றவராகவே வாழ்கிறார் என்பதற்கு நிச்சயமில்லை.தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்ககடவன் (1கொரி 10 : 12).

மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும் ; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார் (நீதி 21 : 2).தங்களை முழுமையாக சோதித்து உணராமல், நாம் சரி என்றும் பிறர் தவறு என்றும் நாமே முடிவு செய்து கொள்கிறோம்.கர்த்தர் நம்முடைய வழியையும் நடக்கையையும் மாத்திரமல்ல, நம்முடைய இருதயத்தையும் ஆராய்ந்து அறிகிறார். ஆகவே கர்த்தருடைய விருப்பம் என்ன நம்முடைய மாம்ச இச்சை என்ன என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நாம் இங்கே எதை விதைக்கிறோமோ, அதையே நித்தியத்திலே அறுப்போம்.ஆகவே மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார் (கலா 6 : 7-8).

1 கொரி 6 : 9-11 ல் அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? என்று கூறப்பட்டுள்ளது. வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக் காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும்... இப்படிப்பட்டவர்கள் தேவஆவியினால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட வேண்டும். இதுமாதிரியான பாவங்கள் புரிந்த அநேக பெயர்க்கிறிஸ்தவர்கள்தான் இன்று உலகில் பெருகிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு (நீதி 30 : 12).

**மாயத்தோற்றத்தின் பயங்கரமான விளைவு**

நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக் 1 : 22-25). சத்தியத்தை குறித்த ஞானமும், தேவஜனங்களின் ஐக்கியத்தில் பங்கெடுத்தலுமாகிய இந்த காரியங்கள் மாத்திரம் நியாயந்தீர்க்கப்படாது.ஏனெனில் அப்படிப்பட்ட ஜனங்கள் தங்கள் கண்களில் உத்திரத்தை வைத்துக்கொண்டுள்ளனர்.முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய் (மத் 7 : 1-5).

மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள்; உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்? (நீதி 20 : 6-7). நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்(லூக் 16 : 15). தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல.கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன் (2 கொரி 10 : 18). ஆகவே நம்மில் அநேகர் இந்த சத்தியத்தை உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம்.நம்மில் பலர் தங்களுடைய குடும்ப பெயர், சமயம், மதம், சபை சார்ந்த பிரிவுகள், சபையில் அங்கம் வகிக்கும் பதவி என்று புகழ்ச்சியை விரும்புவார்கள்.

யோவான்ஸ்நானகன் : ஆபிரகாம் எங்களுக்கு தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள் (மத் 3 : 9) . அவர்கள் ஆபிரகாமின் வழி வந்தவர்கள் என்பதால் தங்களை நீதிமான்களென்று கருதுகிறார்கள்.நம் பெற்றோர்களும், மூதாதையர்களும் கர்த்தருக்குப் பணி செய்திருக்கலாம்.நாமும் கூட தேவசபையில் ஐக்கியம் வைத்திருக்கலாம்.ஆனால் அது நம் வாழ்வை இரட்சிக்காது.

உள்ளார்ந்த வெளிப்புறமான சமயம் சார்ந்த ஆராதனை முறைகளால் ஒருவர் இரட்சிப்படைய வழியில்லை.



**தேவனுக்கு முன்பாக நேர்மையும் வெளியரங்கமுமாய் வாழும்போது, படிப்படியான ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகும்.**

வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 5 : 20).மத் 23 : 23 -29 வசனங்களிலே இயேசுகிறிஸ்து வேதபாரகர், பரிசேயரைக் குறித்தும், அவர்களுடைய சுயநீதியைக்குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்.அவர்கள் தேவனுடைய சத்தியத்தைப் போதிக்கிறார்கள்.

ஆனால் அதன்படி நடப்பதில்லை.அவர்கள் வெளிப்புற உடை நேர்த்தியாக அணிந்திருந்தும், மாம்சீகமான காரியங்களையே சிந்திக்கிறார்கள்.உடை நேர்த்தியாக அணிய வேண்டியது அவசியமே. ஆனால் அதைவிட முக்கியம் உள்ளார்ந்த ஆவியில் பரிசுத்தமாய் காணப்படவேண்டும்.

**இரகசியமானது ஒன்றுமில்லை**
ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் (பிரசங்கி 12: 13-14). தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28 : 13).

**செய்கையினாலே விளங்கும்**
நீதி 20 : 11 ன் படி, பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ, செம்மையோ என்பது, அதின் நடக்கையினாலே விளங்கும்.ஒருவருடைய நேர்மை அவர்களுடைய செய்கையினாலே விளங்கும். நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் (மத் 7 : 16-23) . ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அறியும்போது, நாமும் நம்மை நல்ல கனி கொடுக்கிறவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டும்.அதுவே ஆசீர்வாதமான வாழ்வைத் தரும்.

இயேசு ஆடுகளுக்குள்ளே காணப்படும் ஓநாய்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க செல்லியிருக்கிறார்.நம்மை சுற்றி இருக்கிற அநேக போதகர்களின் பிரசங்கத்திலும்,பேச்சிலும் தேவவல்லமை போல பாசாங்கு செய்வதுதான் ஆடுகளுக்குள் உள்ள ஓநாய்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.உண்மையான ஆடு தன்னுடைய மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால், தன்னை பாதுகாப்பாகவும் நம்பிக்கையாகவும் தன் சுயவாழ்வை சோதித்தறிந்ததாகவும் எண்ணப்படும்.ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது (யோவான் 10 : 27).

**மாம்சத்தையும், ஆவியையும் சோதித்துப் பாருங்கள்**
முழுமையாக நாம் நம்மை சுயபரிசோதனையாக உள்ளார்ந்த மனிதனையும், வெளிப்புற நம்முடைய செய்கைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.இயேசு பேதுருவிடம் இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார் (யோவான் 21: 15).

நாமும் கூட இந்த உலகத்தைக் காட்டிலும் அதிகமாய் அவரை நேசிக்கிறோமா? நாம் உலகத்தை தேடி நாடி ஓடுகிறோமா? அல்லது கிறிஸ்துவுக்குள் (1 கொரி 6 : 20 ல்) உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று கூறப்பட்டுள்ளது.மாம்சீகமாக நம்முடைய பிம்பத்தை எவ்வாறு கண்ணாடியில் பார்க்கிறோமோ அதுபோலவே ஆவிக்குரிய பிம்பத்தையும் நாம் உணர வேண்டும்.அதற்கு நாம் தேவசத்தியத்துக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**தேவனுடைய நியாயத்தை விசாரித்து தேடுங்கள்**
சங்கீதக்காரன் தாவீது தன்னுடைய ஜெபத்தில் பின்வருமாறு ஜெபிக்கிறார். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளைஅறிந்துகொள்ளும் (சங் 139 : 23-24). நாத்தான்வேல் தீர்க்கதரிசியினால் தன்னுடைய பாவங்கள் உணர்த்தப்பட்டபோது அவர் மனந்திரும்பி தேவசமுகத்தில் மன்றாடி மன்னிப்பு கோரினார்.

நாமும் கூட அவரைப் போல, நம் இருதயத்தில் தேவனுக்கு முன்பாக மனப்பூர்வமாய் மன்னிப்பு கேட்போம். பாவத்தை மறைக்காமல் அறிக்கையிடுவோம்.பாவஅறிக்கையும், மனமாறுதலும் உங்கள் வாழ்வில் ஜெயத்தைக் கொண்டுவரும்.

**பிரியமுள்ள இருதயம்**
நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரி 7 : 1). சுத்த மனசாட்சியோடே பவுலைப்போல உங்களை அனுதினமும் காத்துக் கொள்ளுங்கள்.நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் (அப்போ 24 : 16).நாம் ஒவ்வொருவரும் நம்மை பிழையற்ற பரிசுத்தவான்களாய் காத்துக்கொள்ளும்போதுதான் ஆவிக்குரிய வளர்ச்சியை அடைய முடியும்.

**முழுமையான ஒப்புக்கொடுத்தலினால் உண்டாகும் மகிழ்ச்சி**
உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று முழு நிச்சயம் அடையும்போது, உங்கள் மனதில் பரிபூரண சமாதானம் உண்டாகிறது. யோவான் ஆச்சரியமான ஒரு காரியத்தை கூறுவதைக் காணலாம்.அவனுக்கு (சாத்தான்) என்னிடத்தில் ஒன்றுமில்லை (யோவான் 14 : 30).காலம் கடைசிகாலமாயிருக்கிறபடியால், நாம் யார் எப்படி உள்ளோம் ? என்ற உணர்வு நமக்குள் வேண்டும். நம்மைச் சோதித்துப் பார்க்கத் தயங்க கூடாது.ஏனெனில் ஜீவனுள்ள தேவன் நம் தேவன் அவர் நமக்காக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்.

# கேள்விக்கு என்ன பதில்?

**வெளி 4 : 6 ல் சொல்லப்பட்டுள்ள கண்ணாடிக்கடல் என்பது எதைக் குறிக்கிறது ?**

வெளிப்படுத்தின விசேஷத்திலே : அந்த சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக் கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன.அவைகள் முன் புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. வெளி 15 : 2 லும் கூட இதே மாதிரியான ஒப்புமையை காணலாம். இந்த இரு வசனங்களிலும் சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கும் தேவனுடைய பிரசன்னத்தின் மகிமையை காட்டுகிறது.

தேவனுடைய பரிசுத்தவான்கள் சர்வ வல்லமையுள்ள தேவனை ஓயாமல் புகழ்ந்து, போற்றி, துதித்துப் பாடி ஆராதித்து பாடிக் கொண்டேயிருப்பார்கள். இதை நாம் புரிந்துகொண்டோம். இப்போது நம்முடைய கேள்விக்கு வரலாம்.



அந்த கண்ணாடிக்கடல் பளிங்கைப் போல சிங்காசனத்திற்கு முன்பாக காணப்பட்டது. அப்படியானால் அது, தெளிவான கண்ணாடிபோல், வெளிப்படையான தோற்றம் உடையதாய் இருந்தது. மீட்கப்பட்டவர்கள் தேவாதி தேவனை அந்த கண்ணாடிக்கடலின் மேல் நின்று ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். வார்த்தைகளினால் மாத்திரமல்ல, அடையாளத்தினாலும் ஒன்றை தெரிந்துகொள்வோம். அந்த சிங்காசனமானது கண்ணாடிக்கடலாகிய தெளிவான, சுத்தமான , பழுதற்றதுமாகிய ஒன்றின்மேல் பொருத்தப்பட்டிருந்தது. இது வெளிப்படுத்துவது யாதெனில் உண்மை, பரிசுத்தம், சுத்த மனசாட்சி, உண்மையான தேவசபை மாசற்றதும், குற்றஞ்சாட்டப்படாததுமாய், பரிசுத்தமாய், அன்பில் பூரணப்பட்டதாய் விளங்க வேண்டும்.

இப்பூமியிலே வாழுகிற நாட்களிலே தேவனுடைய பரிசுத் ஜனங்களாகிய நாமும் கூட, கண்ணாடிக்கடல் போன்று ஒளிவு மறைவு இல்லாத, சுத் மனசாட்சியோடே, அநீதமற்ற சாட்சியாய் அவருக்கு முன்பாக நிற்போம். கிறிஸ்தவர்களோ, சபையோ, ஐக்கியமோ, ஊழியக்காரர்களோ வெளிப்படையாக வாழாவிடில் ஏதோ ஒரு தவறு உள்ளது என்றே அர்த்தம்.தேவனுடைய நீதிக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்விதமாய் பரிசுத்தத்தோடும், உண்மையோடும் நம் சத்தத்தை உயர்த்தி அவரை ஆராதிப்போம்.


## சுய பரிசோதனை

நான் இருக்கிறேனா?



| | ஆம் | எப்போதாவது | இல்லை |
|---|---|---|---|
| முழு இருதயத்தோடு தேவனில் அன்புகூருகிறேனா? | ☐ | ☐ | ☐ |
| வாழ்வின் எல்லா தருணங்களிலும் அவருக்கு கீழ்ப்படிகிறேனா? | ☐ | ☐ | ☐ |
| பிறர் செய்த துரோகத்தை மன்னிக்கிறேனா? | ☐ | ☐ | ☐ |
| என்னுடைய உடையில் எளிமையும் நேர்த்தியும் உண்டா? | ☐ | ☐ | ☐ |
| தேவனுடைய ஆராதனையை உண்மையாய் விசுவாசத்தோடு செய்கிறேனா? | ☐ | ☐ | ☐ |
| வேதத்தை தினமும் வாசிக்கிறேனா? | ☐ | ☐ | ☐ |
| தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக நான் கவனிக்கிற அல்லது சிந்திக்கிற சில காரியங்களைக் குறித்து வெட்கமுண்டாக்குகிறேனா? | ☐ | ☐ | ☐ |
| என் வாழ்வில் சிலவற்றை மறைக்க எண்ணுகிறேனா? | ☐ | ☐ | ☐ |
| மனத்தாழ்மையாய் நடந்து கொள்கிறேனா? | ☐ | ☐ | ☐ |
| சபையில் நடந்துகொள்வதைப் போலவே வீட்டிலும் பரிசுத்தமாய் வாழ்கிறேனா? | ☐ | ☐ | ☐ |

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY





உங்களுக்குத் தெரியுமா?

இயேசுகிறிஸ்து வேதத்திலே சொல்லிய மாய்மாலக்காரன் என்கிற வார்த்தையின் அர்த்தம் என்னவெனில் – ஒன்றை சொல்லிவிட்டு மற்றொன்றை செய்வது அல்லது இருவேறு சுபாவமாய் நடிக்கிறவர்கள் என பொருள். மூல வார்த்தையான கிரேக்க மொழியில் மேடை நடிகர்கள் என பொருள். ஏனெனில் தனக்கு கொடுக்கப்பட்ட ஒரு வேஷத்தில் அல்லது கதாபாத்திரத்தில் நடித்து, அதன் மூலமாக நல்ல அங்கிகாரமும் உயர்வும், பலருடைய பாராட்டுதலையும் பெறுகிறான் ஒரு நடிகன்.அதேசமயம் தான் ஏற்று நடித்த, அந்த கதாபாத்திரத்திற்கு செவிகொடுக்கவோ, கவனிக்கவோ யாருமில்லையெனில், பின்பு அவர் வேறுமாதிரியான சில வேடங்களை மாற்றி நடித்து பாராட்டுதலைப் பெறுவார்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

கர்த்தருக்கு பரிசுத்தம்

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## நீங்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்

ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாவதாக, கிறிஸ்து நம்மை ஏறறுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள் – ரோமர் 15 : 7

கிறிஸ்து எல்லா தேசத்தாரையும், பாஷைக்காரரையும், எல்லா மதத்தினரையும் நேசிக்கிறார்.சிநேகிதனாய் அவர்களோடு உறவாட விரும்புகிறார்.பலதரப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட அனைத்து சமுகத்தினரையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். நம்முடைய ஏழ்மை நிலையிலும், உடைந்து போன நேரத்திலும் கூட அவர் நம்மை நேசித்து, ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். அவருடைய அன்பினாலே நம்மை சேர்த்துக்கொண்டு, அவருடைய கிருபையினாலே நாம் இழந்துபோன எல்லாவற்றையும் நமக்கு மீட்டு மீண்டும் தருகிறார். இரட்சிக்கப்பட்டு, நம் வாழ்வு மாற்றப்பட்டாலும் கூட, பல நேரங்களில் இன்னும் கூட நாம் நம்முடைய ஜென்ம சுபாவங்களையும், மனுஷீகத்தின் மாம்சீகத் தன்மைகளையும் உடையவர்களாகவே காணப்படுகிறோம்.



அது நம்முடைய பெலவீனம். இவையெல்லாவற்றிலும் கர்த்தர் நம்மை நேசித்து ஏற்றுக்கொள்கிறாரென்றால் அவருடைய அன்பு எவ்வளவு பெரியது. நாமோ அந்நியர்களும், பரதேசிகளுமாயிராமல், தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களானோம். இவ்வாறு இயேசுகிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டதால், நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளக் கடவோம். கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் அனைவரையும் சகோதர, சகோதரிகளாக ஏற்றுக்கொண்டு அன்பு பாராட்ட வேண்டும்.

கிறிஸ்து, நாம் பாவிகளாய் இருக்கையிலே நம்மை தேடிவந்து ஏற்றுக்கொண்டார். அப்படியானால் நாமும் எவ்வண்ணமாய் நடந்து கொள்ள வேண்டும்? பிரிவினையை தடுத்து, சாதி, மத, பேதங்களை தவிர்த்து கிறிஸ்து நம்மை நேசிப்பது போல நாமும் ஒருவரிலொருவர் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, ஆவிக்குரியவர்களாயும் நாம் பிறரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியம் உறுதிப்படும்.

பவுல் நமக்கு அறிவுறுத்தி ஒன்றை கூறுகிறார்: விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மனஐயங்களை குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள் (ரோமர் 14 : 1) . மனந்திரும்பிய யூதர்கள், சில பழக்கவழக்கங்களை தமது பாரம்பரிய பழைய நியாயப்பிரமாணத்தின்படி செய்து கொண்டிருந்தார்கள்.அவர்களைக் குறித்துதான் பவுல் இவ்வாறு கூறுகிறார். நம்முடைய ஐக்கியத்திலே அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய மனஐயங்களை குற்றப்படுத்தி கூற கூடாது. அவர்களோடு விவாதத்தில் இறங்க கூடாது.அவர்களை நேசித்து மெதுவாய் நடத்துங்கள்.

தேவபிள்ளைகளாகிய நமக்குள்ளேயும் கூட விசுவாசத்தில் பெலவீனமுள்ளவர்களைச் சேர்த்துக்கொண்டு, கர்த்தரிடத்தில் அன்புகூரக்கடவோம், ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்.

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK,
SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316